## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (18.05.2022 முதல் 22.05.2022)

அறிக்கை எண்: 39/2022 தேதி :17.05.2022

### தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37 °செ முதல் 38 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ முதல் 28 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (18.05.2022 முதல் 22.05.2022)

| கடந்த வார வானிலை (13.05.2022 முதல் 16.05.2022) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (18.05.2022 முதல் 22.05.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 13/05 | நாள்-2 14/05 | நாள்-3 15/05 | நாள்-4 16/05 | தேதி | நாள்-1 18/05 | நாள்-2 19/05 | நாள்-3 20/05 | நாள்-4 21/05 | நாள்-5 22/05 |
| 0.0 | 0.0 | 21.7 | 1.0 | மழை (மி.மீ.) | 4 | 0 | 0 | 3 | 6 |
| 36 | 37 | 38 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 37 | 37 | 38 |
| 27 | 28 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 28 | 28 | 28 | 26 |
| 4 | 4 | 4 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 3 | 3 | 4 | 5 |
| 66-65 | 67-63 | 70-65 | 69-62 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-60 | 70-60 | 70-60 | 70-60 | 70-60 |
| 7 | 5 | 5 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 8 | 8 | 8 | 8 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு |

### தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் தெளிவாக காணப்படும். 18.05.2022, 21.05.2022 மற்றும் 22.05.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36 °செ முதல் 38 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ முதல் 28 °செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் கோடை உழவு செய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் பூச்சிகளின் கூண்டுப் புழுக்களை அழிக்கவும். |

| | | |
|---|---|---|
| பசுந்தாள் பயிாகள் | | வரும் நாட்களில் லேசான மழையை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை மற்றும் கொழிஞ்சி போன்றவற்றைத் தெளிக்கவும். |
| இறவை உளுந்து | வளர்ச்சி பருவம் | வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயறுவகை பயறுகளுக்கு நீர் பாய்ச்சுவதை தள்ளிப்போடவும். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | மழைகாலத்தில் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டால் நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் கோடை உழவு செய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் பூச்சிகளின் கூண்டுப் புழுக்களை அழிக்கவும்.

**இயக்குநர்**